தினமணி

**பரிதவிப்பில் டெல்டா விவசாயிகள்!**

வி. தேவதாசன்

First Published : 24 Oct 2011 01:26:23 AM IST

சென்னை, அக். 23: தமிழக அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 17 சதவீதத்துக்கும் அதிகமான ஈரப்பதம் உள்ள நெல் கொள்முதல் செய்யப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் குறுவை நெல் அறுவடை செய்யும் விவசாயிகள் செய்வதறியாது தவித்து வருகின்றனர்.

மத்திய அரசின் இந்திய உணவுக் கழகத்துக்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு நெல் கொள்முதல் செய்து வருகிறது. அவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பதம் 17 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கக் கூடாது என இந்திய உணவுக் கழகம் நிபந்தனை விதித்துள்ளது.

இந்த நிபந்தனையை சற்று தளர்த்தி 21 சதவீதம் வரை ஈரப்பதம் உடைய நெல்லை கொள்முதல் செய்ய இந்திய உணவுக் கழகத்தின் அனுமதியை தமிழக அரசு பெற்றிருந்தது. இந்த அனுமதியானது கடந்த 30.9.2011-ம் தேதியோடு காலாவதியாகி விட்டது.

இதனால், இம்மாதம் 1-ம் தேதி முதல் 17 சதவீதத்துக்கு அதிகமான ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்வது நிறுத்தப்பட்டுள்ளது.

சம்பா மற்றும் தாளடி நெல் அறுவடையின்போது முதல் நாள் கதிர் அறுத்தால், ஒரு நாள் முழுவதும் வெயிலில் காய வைத்து, மறுநாள்தான் களத்துக்கு கொண்டு சென்று கதிர் அடிக்கும் பணி நடைபெறும். ஆனால், குறுவை அறுவடைப் பணி வடகிழக்குப் பருவமழை காலத்தில் நடைபெறுவதால், எந்த நேரத்திலும் மழை பெய்யும். எனவே, கதிர் அறுத்த உடனேயே களத்துக்கு கொண்டு சென்று கதிர் அடிப்பது கட்டாயம் ஆகும்.

எனவே, சம்பா, தாளடி நெல்லைவிட இயல்பாகவே குறுவை நெல்லில் ஈரப்பதம் அதிகமாக இருக்கும்.

மேலும், இப்போது விவசாயக் கூலித் தொழிலாளர்கள் பற்றாக்குறை அதிகமாக உள்ளதால், பெரும்பாலும் இயந்திரங்கள் மூலம்தான் அறுவடைப் பணிகள் நடைபெறுகின்றன. இதனால் இயந்திரங்களில் நெற்பயிர் கசக்கப்படும்போது, பயிரின் தண்டுகளில் உள்ள ஈரத்தால், நெல்லின் ஈரப்பதம் மேலும் அதிகமாகிறது.

இது போன்ற பல காரணங்களால் குறுவை நெல் சாதாரணமாகவே சுமார் 22 சதவீதம் வரை ஈரப்பதம் உடையதாக இருக்கும். எனவே, 17 சதவீத ஈரப்பதத்தோடு குறுவை நெல்லை அறுவடை செய்வது என்பது நடைமுறை சாத்தியமில்லாதது.

இந்த சூழலில் இம்மாதம் 1-ம் தேதியிலிருந்து 17 சதவீத ஈரப்பதத்துக்கு அதிகமான நெல்லை கொள்முதல் செய்வது நிறுத்தப்பட்டுள்ளதால், விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை காய வைத்து, ஈரப்பதத்தைக் குறைப்பதற்கு பெரும் அல்லல்படுகின்றனர்.

டெல்டா மாவட்டங்களில் இப்போது வயல் பகுதிகள் எங்கும் நீர் நிறைந்திருக்கின்றன. இதனால், வயல்களில் காய வைக்கும் கள வசதி இல்லை.

எனவே, இப்போது தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் நெடுஞ்சாலைகளே களங்களாக மாறியுள்ளன. அந்த மாவட்டங்களில் எல்லா சாலைகளின் நெடுகிலும் அறுவடை செய்த நெல்லை காய வைக்கும் பணிகள்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதற்கிடையே கடந்த இரு நாள்களாக அந்த மாவட்டங்களில் வடகிழக்குப் பருவ மழை தொடங்கியுள்ளது. இதனால் நெல்லை காய வைப்பதும் தடைபட்டுள்ளது. இந்த மழை மேலும் தொடரும் என்றே எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் நெல்லை பாதுகாக்க முடியாமல் தவிக்கின்றனர்.

விவசாயிகளின் இந்த பரிதாபமான நிலையைத் தனியார் வியாபாரிகள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். விவசாயியின் களத்துக்கே லாரிகளுடன் நேரில் செல்லும் வியாபாரிகள், அடிமாட்டு விலைக்கு நெல்லை விலை பேசுகிறார்கள். மாற்று வழி எதுவும் தெரியாததால், வியாபாரிகள் கேட்ட விலைக்கே நெல்லை விற்பனை செய்ய வேண்டிய கட்டாயம் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் குவிண்டாலுக்கு ரூ. 200 முதல் ரூ. 300 வரை இழப்பு ஏற்படுகிறது.

இது குறித்து காவிரி டெல்டா பாசனப் பகுதி விவசாயிகள் நலச் சங்கத்தின் பொதுச் செயலாளர் மன்னார்குடி எஸ். ரங்கநாதன் கூறியதாவது:

நெல்லைப் பொருத்தவரை 17 சதவீதத்துக்கும் குறைவான ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்வது இல்லை என்பது இந்திய உணவுக் கழகத்தின் பொதுவான விதி. இது வட மாநிலங்களுக்குப் பொருந்தலாம். ஆனால், தமிழகத்துக்குப் பொருந்தாது.

ஏனெனில், வடகிழக்குப் பருவ மழையின் போது தமிழகத்தில் காவிரி டெல்டா மாவட்டங்களில்தான் அதிக மழை பொழிகிறது. அந்த நேரத்தில்தான் இங்கு குறுவை அறுவடை நடைபெறுகிறது.

எனவே, 17 சதவீதத்துக்கும் குறைவான ஈரப்பதத்துடன் நெல் அறுவடை என்பது இயலாதது. அதனால்தான் 21 சதவீதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறோம். இதை நாங்கள் வெறும் சலுகையாகக் கேட்கவில்லை. 17 சதவீதத்துக்கும்

மேல் எவ்வளவு ஈரப்பதம் இருந்தாலும், கூடுதல் ஈரப்பதத்துக்கேற்ப குறிப்பிட்ட தொகையை பிடித்தம் செய்து கொண்டு, கொள்முதல் செய்யவே வலியுறுத்துகிறோம்.

மேலும், 17 சதவீதத்துக்கும் கூடுதல் ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய இந்திய உணவுக் கழகத்தின் அனுமதியை ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு கேட்டுப் பெற வேண்டும் என்பது சரியானதாக தெரியவில்லை. இதற்காக ஒரு நிரந்தர அனுமதியைத் தமிழக அரசு கேட்டுப் பெற வேண்டும் என்றார் ரங்கநாதன்.

விவசாயிகளின் இந்தப் பரிதாப நிலையைப் போக்கத் தமிழக அரசு என்ன செய்யப் போகிறது என்பது பற்றி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் எம். வீரசண்முகமணியிடம் கேட்ட போது, அவர் கூறியதாவது:

இப்பிரச்னை தொடர்பாக தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. 17 சதவீதத்துக்கும் அதிகமான ஈரப்பதம் கொண்ட நெல்லையும் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டி, மத்திய அரசின் உணவுத் துறை செயலாளருக்கு ஏற்கெனவே கடிதம் எழுதியுள்ளோம்.

இதற்காக மத்திய உணவு அமைச்சகத்துடன் தொடர்ச்சியாக தொடர்பு கொண்டு வருகிறோம். மத்திய அரசின் அனுமதி இன்னும் ஓரிரு நாளில் கிடைத்து விடும் என உறுதியாக நம்புகிறோம். எனவே, விரைவிலேயே இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என்றார் அவர்.

விவசாயிகளின் தர்மசங்கடமான நிலையை பயன்படுத்தித் தனியார் வியாபாரிகள் முழுமூச்சில் களமிறங்கி நெல் கொள்முதல் செய்வதில் மும்முரமாக இருக்கிறார்கள். அனுமதி கிடைக்குமா கிடைக்காதா என்று அரசு உறுதியாக எதுவும் கூறாததாலும், எந்தவித உத்தரவாதமும் அளிக்க முன்வராததாலும் தமிழகத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் செய்வதறியாது திகைக்கின்றனர்.

கூலித் தொழிலாளர் பற்றாக்குறையாலும், அதிக லாபம் இல்லாமல் இருப்பதாலும் ஏற்கெனவே பாதிப்பில் பரிதவிக்கும் நெல் சாகுபடி விவசாயிகள், அரசின் நெல் கொள்முதல் பிரச்னையால் மனமொடிந்த நிலையில் இருக்கிறார்கள்.

**அக் 27-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 23 Oct 2011 11:30:47 AM IST

பெரம்பலூர், அக். 22: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் அக். 27-ம் தேதி நடைபெறுகிறது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஷ் அஹமது.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் அக். 27-ம் தேதி காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் வேளாண்மை தொடர்பான நீர்ப்பாசனம், வேளாண்மைக்கான கடன் உதவிகள்,

இடுபொருள்கள், இயந்திரங்கள், விவசாயிகளின் மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளன. எனவே, இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவித்துப் பயன்பெறலாம் என்றார் அவர்.

**மஞ்சள் இருப்பு வைக்க கிடங்கு வசதி: விவசாயிகள் கோரிக்கை**

First Published : 23 Oct 2011 08:47:50 AM IST

ஈரோடு, அக். 22: மஞ்சள் இருப்பு வைக்க, ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் போதிய அளவு கிடங்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

÷ஈரோடு மாவட்டத்தில் நெல், கரும்புக்கு அடுத்து அதிக அளவில் மஞ்சள் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. ஈரோடு ஒழுங்கு முறை விற்பனைக்கூடம், தனியார் மஞ்சள் சந்தை மற்றும் கூட்டுறவு சங்கங்களில் நடைபெறும் ஏலத்தின் மூலம் மஞ்சள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

÷கடந்த சில ஆண்டுகளாக மஞ்சள் ஒரு குவிண்டால் ரூ.8 ஆயிரம் வரை விலைபோனது. ஆனால் கடந்த ஆண்டு ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ.18 ஆயிரம் வரை விற்பனையானது. இதனால் இந்த ஆண்டு ஏராளமான விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்தனர். அதனால் மஞ்சள் வரத்து அதிகரித்து விலை சரிந்தது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் ரூ.15 ஆயிரம் வரை விற்பனையான ஒரு குவிண்டால் மஞ்சள் தற்போது ரூ.4 ஆயிரமாக சரிந்து உள்ளது. இந்த வார இறுதியில் ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் ரூ.5,072 முதல் ரூ.5,466 வரை விற்பனையானது. கிழங்கு மஞ்சள் ஒரு குவிண்டால் ரூ.4,783 முதல் ரூ.5,029 வரை விற்பனையானது.

÷மஞ்சள் விலை தொடர்ந்து குறைந்து வருவதால், விவசாயிகள் வீடுகளில் இருப்பு வைத்து உள்ள மஞ்சளை அதிக அளவில் விற்பனைக் கூடத்திற்கு கொண்டு வருகின்றனர்.

ஆனால் அங்கு மஞ்சளை இருப்பு வைப்பதற்கு இடவசதி இல்லை. இதனால் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் மஞ்சள் மூட்டைகளை வைக்க அதிகாரிகள் அனுமதிப்பதில்லை.

மஞ்சளை கொண்டு வரும் விவசாயிகள், மீண்டும் வீட்டிற்கு கொண்டு செல்வதால், விவசாயிகளுக்கு கூடுதல் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த பிரச்னைக்கு தீர்வு காண ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கூடுதலாக கிடங்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துளளனர்.

**மழையால் தக்காளி விலை திடீர் உயர்வு**

First Published : 23 Oct 2011 06:46:39 PM IST

காரைக்கால், அக். 23 : தமிழகப் பகுதியில் ஆங்காங்கே மழை பெய்யத் தொடங்கியதையொட்டி தக்காளியின் விலை கடந்த ஓரிரு வாரத்துக்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் இருமடங்கு விலை அதிகரித்துவிட்டது.

கடந்த சில வாரங்களாக கிலோ ரூ.10 என்ற அளவில் விற்பனையான தக்காளி, கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை ரூ.16 என்ற நிலையிலிருந்து உயர்ந்து தற்போது ரூ.24 என்ற அளவில் விற்கப்படுகிறது.

காரைக்காலில் ஞாயிற்றுக்கிழமைதோறும் வார சந்தை நடைபெறுகிறது. இங்கு ஏராளமான வாகனங்களில் தக்காளி விற்பனைக்காக சனிக்கிழமை மாலையே பெட்டிகளில் வந்துசேர்ந்துவிடும். ஞாயிற்றுக்கிழமை வியாபாரத்தின்போது இவை வகைக்கு ஏற்றவாறு ரூ.24 முதல் கூடுதல் விலைக்கு விற்கப்பட்டது.

இதுகுறித்து வியாபாரிகள் கூறும்போது, தக்காளி உற்பத்தியாகும் பகுதிகளில் மழை பெய்யத் தொடங்கிவிட்டது. இதனாலேயே கடந்த ஓரிரு வாரமாக தக்காளின் விலை உயர்ந்து காணப்படுகிறது. இன்னும் பருவமழை தொடர்ந்து பெய்யத் தொடங்கவில்லை. தொடங்கிவிட்டால் ரூ.24 என்ற நிலையிலிருந்து இன்னும் அதிகரிக்க வாய்ப்புண்டு என தெரிவித்தனர்.

தினமலர்

உண்மையின் உரைகல்

**ஆத்தூரில் பருத்தி ஏலம்ரூ.4 லட்சம் வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 24,2011,01:17 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்தில், 300 மூட்டை பருத்தி, 4 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், ஞாயிற்றுக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடந்து வருகிறது. நேற்று நடந்த ஏலத்துக்கு, ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள், விளைவித்த பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

ஏலத்தில், டி.சி.ஹெச்., ரக பருத்தி குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,859 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,019 ரூபாய்க்கும், பி.டி., ரக பருத்தி குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,089 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,369 ரூபாய்க்கும், கொட்டுப்பருத்தி குவிண்டால் குறைந்தபட்சமாக, 600 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 1,869 ரூபாயக்கும் விற்பனையானது. ஏலத்துக்கு, பருத்தி வரத்து குறைந்து, 300 மூட்டை பருத்தி, 4 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**தொடர் மழையால் தக்காளி ரூ.10 உயர்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 24,2011,03:22 IST

ஈரோடு: தக்காளி விளையும் இடங்களில் தொடர்ந்து பெய்த மழையால், ஈரோட்டுக்கு தக்காளி வரத்து குறைந்தது. அதனால், ஒரே நாளில் கிலோவுக்கு 10 ரூபாய் உயர்வு ஏற்பட்டது.நமது சமையலில் தக்காளி இல்லாத சாம்பார், ரசம் கிடையாது. சீஸனுக்கு தகுந்தாற்போல், விலை குறைவதும், அதிகரிப்பதும் வழக்கம். வெயில் காலத்தில் தக்காளி கிலோவுக்கு 50 பைசா அளவில் விற்பதும், விவசாயிகள் சாகுபடி செய்த அளவுக்கு கூட வருவாய் இல்லாமல், செடிகளிலேயே தக்காளியை விட்டு விடுவதும் உண்டு. மேலும், விலை கிடைக்காததால், மாடுகளுக்கு உணவு பொருளாக தக்காளி போடப்படுவது வழக்கம்.ஈரோட்டை பொறுத்த அளவில் தாளவாடி மலைப்பகுதி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஆந்திரா மாநிலங்களில் இருந்து தான் தக்காளி வரத்து உண்டு. தினமும் பத்து லாரி லோடு அளவுக்கு தக்காளி வருவதும், அவை அனைத்தும் விற்று விடுவதும் வாடிக்கை.தக்காளியில் நாட்டு தக்காளி, கிராஸ் தக்காளி, பெங்களூரு தக்காளி என மூன்று விதங்கள் உள்ளன. நாட்டு தக்காளியில் நோய் அழுகல் அடிக்கடி ஏற்படுவதால், கிராஸ் தக்காளியை தான் விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டு வருகின்றனர். பெங்களூரு தக்காளி, கர்நாடகாவில் இருந்து வரவழைக்கப்படுகிறது.

மக்கள் பெரும்பாலும் கிராஸ் தக்காளியை வாங்குவதால், அதையே அதிகளவில் வியாபாரிகள் வரவழைக்கின்றனர்.தென்மேற்கு பருவமழை சீஸன் இன்னும் முடியாமல், தொடர்ந்து வருகிறது. தாளவாடி, தர்மபுரி, கிருஷ்ணகிரி பகுதிகளில் தொடர்ந்து பெய்யும் மழையால், தக்காளி செடிகள் அழுகி வருகின்றன. அதேபோல், செடிகளிலேயே தக்காளி பழுக்காமல் அழுகவும் செய்துள்ளன.அதனால், ஈரோட்டுக்கு வர வேண்டிய பத்து லோடு தக்காளிக்கு பதிலாக ஐந்து லோடு வரையே வருகிறது. பற்றாக்குறை காரணமாக ஒரே நாளில் விலை திடீரென உயர்ந்துள்ளது.நேற்று முன்தினம் கிராஸ் தக்காளி ஒரு கிலோ 15 ரூபாய்க்கு விற்றது, நேற்று ஒரே நாளில் கிலோவுக்கு பத்து ரூபாய் உயர்ந்து 25 ரூபாய்க்கு விற்றது. நாட்டு தக்காளி வரத்து குறைந்திருந்தாலும் கூட, கிலோ 20 ரூபாய் என்றளவில் தான் விற்கிறது.இது குறித்து ஈரோடு

நேதாஜி மார்க்கெட் வியாபாரிகள் கூறுகையில், ""இந்நிலை தீபாவளி பண்டிகை வரை நீடிக்கும். மழை குறைந்து வெயில் அடித்தால் மட்டுமே தக்காளி வரத்து அதிகரிக்கும். அடுத்து வடகிழக்கு பருவமழை சீஸன் தொடங்கி விடும் என்பதால், தமிழகத்தில் குறிப்பாக தர்மபுரி, கிருஷ்ணகிரியில் இருந்து தக்காளி வரத்து மிகவும் குறைந்து விடும். அப்போது, விலை மேலும் அதிகரிக்கலாம்," என்றார்.

**உணவு பதப்படுத்துதல் துறையில் கூடுதல் கவனம்: கவர்னர் வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 23,2011,23:25 IST

நந்தம்பாக்கம் : ""விவசாயத் துறையின் வளர்ச்சி தான், நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கும் வழிவகுக்கும். இதனால், விவசாயம் மற்றும் உணவு பதப்படுத்துதல் துறையில், கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்," என்று கவர்னர் ரோசய்யா பேசினார்.நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், உணவு பதப்படுத்துதல் குறித்த கருத்தரங்கை துவக்கி வைத்த கவர்னர் ரோசய்யா பேசியதாவது:தொழில்நுட்ப மேம்பாடு என்பது, உற்பத்தியைப் பெருக்க உதவினால் மட்டுமே நாட்டின் பொருளாதாரம் உயரும். தற்போது, இரண்டாவது பசுமை புரட்சியை நாடு சந்தித்து வருகிறது.மத்திய, மாநில அரசுகள் எடுத்த நடவடிக்கை காரணமாக, உணவுப் பொருட்கள் உற்பத்தி, 2010-11ம் ஆண்டில், 241 மில்லியன் டன்னை எட்டியுள்ளது. விவசாயத் துறையை, புதுப்பொலிவாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால், இந்த ஆண்டு 5.4 சதவீதம் கூடுதல் வளர்ச்சி கிடைத்துள்ளது. நமது விவசாயிகளின் திறனால், உணவுப் பண்டங்கள் கோதுமை மற்றும் அரிசி கையிருப்பு, அதிகமாக விளைவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் உணவு தானியங்கள், தற்போது தேவைக்கு இரு மடங்கு அதிகமாகவே உள்ளது.விவசாயத் துறையின் வளர்ச்சி தான், நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொடர்ந்து, வேகமான வளர்ச்சி எட்ட வேண்டுமானால், உணவு பதப்படுத்துதல் துறையிலும் வளர்ச்சி வேண்டும். இதன் மூலம் மட்டுமே அதிவேக வளர்ச்சியை எட்ட முடியும். அரசு, நுகர்வோர் அமைப்புகள், பொது சுகாதார நிறுவனங்கள், தொழில் துறை ஆகியவை இணைந்து உணவுத் துறையில் ஒருங்கிணைப்புடன் செயல்பட வேண்டும்.இவ்வாறு ரோசய்யா பேசினார்.கருத்தரங்கத் தலைவர் சஞ்சய் மாரிவாலா, சி.ஐ.ஐ., தலைவர் ரங்கநாத் உள்ளிட்ட பலர், கருத்தரங்கில் கலந்து கொண்டனர். கருத்தரங்கை முன்னிட்டு அமைக்கப்பட்ட கண்காட்சியை, கவர்னர் ரோசய்யா திறந்து வைத்தார்

**மழை தொடர்ந்தால் மலை காய்கறிகளுக்கு பாதிப்பு வரும்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 23,2011,03:38 IST

ஊட்டி : வடகிழக்கு பருவமழை துவங்கியதை அடுத்து மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. சில இடங்களில் இரவு பகலாக கன மழை பெய்து வருகிறது. மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் பல ஏக்கரில் உருளைகிழக்கு, முட்டைகோஸ், காரட், பீட்ரூட் உள்ளிட்ட மலை காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளது. சில இடங்களில் பயிரிடப்பட்ட மலை காய்கறிகள் அறுவடைக்கு தயார் நிலையிலும் உள்ளன. இந்நிலையில், பெய்து வரும் தொடர் மழையால் மலை காய்கறிகள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

---

## *அடுத்த நான்கு ஆண்டுகளில் உணவு பதப்படுத்துதல் துறையின் வருவாய் ரூ.16 லட்சம் கோடியாகும்*

*இந்தியாவில், அடுத்த நான்கு ஆண்டுகளில் உணவு பதப்படுத்துதல் துறையின் மொத்த விற்பனை மதிப்பு 32,000 கோடி டாலராக (சுமார் ரூ.16 லட்சம் கோடி) உயரும் என கன்கார் இன்கிரெடியன்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் சஞ்சய் மாரிவாலா தெரிவித்தார்.*

*இவர் இந்திய தொழிலக கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ள 'ஃபுட்புரோ 2011' நிகழ்ச்சியின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த இரண்டுநாள் நிகழ்ச்சியில் 170 நிறுவனங்கள் பங்கேற்கின்றன. உணவு பதப்படுத்துதல் துறைக்கான பல்வேறு நவீன சாதனங்கள் இந்த கண்காட்சியில் இடம் பெறுகின்றன.*

*இத்துறையில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்க்கும் வகையில் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் என்பதை மாரிவாலா சுட்டிக் காட்டினார். உணவு பதப்படுத்துதல் துறையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மத்திய, மாநில*

அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. மதிய உணவு திட்டத்தின் வாயிலாக பள்ளிக்கூட மாணவர்களுக்கு பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறினார்.
தற்போது நம் நாட்டில் 25,000 பதிவு பெற்ற உணவு பதப்படுத்தும் தொழிற்பிரிவுகள் உள்ளன. இன்றைய நிலையில் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடு ரூ.84,000 கோடியாக உள்ளது.

## ‘உணவுப்பொருட்களின் விலை உயர்வு கவலை அளிக்கிறது’ பிரணாப் முகர்ஜி பேட்டி

கொல்கத்தா, அக்.24–
“உணவுப்பொருட்களின் விலை உயர்வு கவலை அளிக்கிறது” என்று மத்திய மந்திரி பிரணாப் முகர்ஜி கூறினார்.
விலைவாசி உயர்வு
மத்திய நிதி மந்திரி பிரணாப் முகர்ஜி கொல்கத்தா சென்று இருக்கிறார். அங்கு அவர் வருவாய் அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டார். கூட்டம் முடிந்ததும், பிரணாப் முகர்ஜி நிருபர்களிடம் பேசியதாவது:–
நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்து இருக்கிறது. இது கவலை அளிப்பதாக இருக்கிறது. என்றாலும் விலைவாசி உயர்வை கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருக்கிறோம்.
2010–ம் ஆண்டு பணவீக்கம் 20 சதவீதமாக இருந்தது. அதை படிப்படியாக கட்டுப்படுத்தி தற்போது 10.6 சதவீதத்துக்கு கொண்டு வந்து இருக்கிறோம். இன்னும் குறைக்க ரிசர்வ் வங்கி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.
மம்தாவின் வேண்டுகோள்
மேற்கு வங்காள முதல்–மந்திரி மம்தா பானர்ஜி, தனது மாநிலத்துக்கு மத்திய அரசு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார். இதுபற்றி பிரதமரிடம் பேசுவேன்.மேற்கு வங்காள மாநிலத்தில் மாவோயிஸ்டுகளால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நலத்திட்டங்களை நிறைவேற்ற கூடுதல் நிதி அளிக்க வேண்டும் என்றும் மம்தாபானர்ஜி கோரி வருகிறார். இதுபற்றி நான் உள்துறை மந்திரி ப.சிதம்பரத்திடம் பேசுவேன்.இவ்வாறு பிரணாப் முகர்ஜி பேசினார்.

## தொடர் மழை எதிரொலி பவானி ஆற்றில் திடீர் வெள்ளம் காலிங்கராயன் அணை நிரம்பி வழிந்தது


ஈரோடு மாவட்டம் பவானி அருகே உள்ள காலிங்கராயன் அணை நிரம்பி உபரி நீர் செந்நிறமாக அணையில் இருந்து வழிந்து செல்வதை படத்தில் காணலாம்.

*பவானி, அக். 24–*

*நீலகிரி மலைப்பகுதி மற்றும் சத்தியமங்கலம் பகுதிகளில் மழை பெய்து வருவதால் பவானி ஆற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இந்த வெள்ளம் காரணமாக காலிங்கராயன் அணையில் தண்ணீர் நிரம்பி வழிந்து காவிரி ஆற்றில் கலந்தது.*

*பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு*

*கடந்த சில நாட்களாக நீலகிரி மலைப்பகுதி மற்றும் ஊட்டி, மேட்டுப்பாளையம், சத்தியமங்கலம், கோபி ஆகிய பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த தொடர் மழை காரணமாக ஈரோடு மாவட்டம் பவானி ஆற்றில் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு காலிங்கராயன் அணைக்கு பெரும் அளவில் தண்ணீர் வந்து அணை நிரம்பி வழிந்தது.*

*காலிங்கராயன் அணை நிரம்பி கடல்போல் காட்சி அளிப்பதும், அணையில் இருந்து தண்ணீர் வெளியேறுவதும் கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது.*

*விவசாயிகள் மகிழ்ச்சி*

*பவானியில் உள்ள காலிங்கராயன் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் மூலம் கொடுமுடி, கரூர் வரை சுமார் 15 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.*

*பவானி ஆற்றில் நேற்று ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக வாய்க்கால்களில் அதிக அளவு தண்ணீர் சென்றது. அதுபற்றி அறிந்ததும், பொதுப்பணித்துறை*

*அதிகாரிகள் அணையில் இருந்து வெளியேறும் தண்ணீரின் அளவை குறைத்தனர். இதனால் வெள்ளத்தினால் பயிர்கள் சேதமடைவது தவிர்க்கப்பட்டது.*
*கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் பவானியை சுற்றிலும் உள்ள பகுதிகளில் நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.*
*செந்நிறமாக காட்சி தரும் பவானி ஆறு*
*திடீர் மழை வெள்ளம் காரணமாக பவானி ஆற்றில் தண்ணீர் செந்நிறமாக சென்றது. இந்த அற்புத காட்சியை பவானி ஆற்றுப்பாலத்தில் இருந்து மாணவர்கள் கண்டு மகிழ்ந்தனர். சிலர் ஆற்றுத்தண்ணீரில் குதித்து நீச்சல் அடித்து மகிழ்ந்தனர்.*

தினகரன்

***ஆவின் தீபாவளி ஸ்வீட் கிலோவுக்கு ரூ.20 அதிகரிப்பு***

பதிவு செய்த நாள் : 10/24/2011 0:19:27



சேலம் : இனிப்பு தயாரிப்புக்கான மூலப்பொருட்கள் விலை உயர்வை அடுத்து, இந்த ஆண்டு ஆவின் நிறுவனத்தின் தீபாவளி ஸ்வீட் வகைகளும் கிலோவுக்கு ரூ.20 உயர்த்தப்பட்டு உள்ளது. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சேலம் ஆவின் நிறுவனம், ஸ்பெஷல் ஸ்வீட் வகைகளை தயாரித்து விற்பனை செய்து வருகிறது. இங்கிருந்து தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களுக்கும் ஸ்வீட் பாக்சுகள் சப்ளை செய்யப்படுகிறது. தீபாவளிக்காக நேற்று வரை 8 டன் இனிப்புகள் தயாரிக்கப்பட்டு உள்ளது.

மக்கள் அதிகம் விரும்பும் சோன்பப்டி இந்த ஆண்டு சாக்லெட், பிஸ்தா, ஆரஞ்ச் என மூன்று சுவைகளில் தயாரிக்கப்பட்டு உள்ளது. மில்க் பேடா, பர்ஃபி, பால் கோவா, மைசூர்பா, அல்வா ஆகிய இனிப்புகளும் தயாரிக்கப்பட்டு உள்ளது. இவை தனித்தனியாகவும், கலந்தும் பாக்கெட் செய்து, விற்பனைக்கு வைக்கப்பட்டு உள்ளது. 500 கிராம், 750 கிராம் பாக்கெட்டுகளில் விற்பனை செய்யப்படுகிறது.

சர்க்கரை, கார்ன் ஃபிளவர் மாவு, கடலை மாவு, மைதா போன்ற மூலப்பொருட்களின் விலை உயர்வு மற்றும் ஆள் தட்டுப்பாடு காரணமாக இந்தாண்டு ஆவின் இனிப்பு வகைகள் கிலோவுக்கு ரூ.20 உயர்த்தப்பட்டு உள்ளது. சேலம் தளவாய்ப்பட்டியில் உள்ள ஆவின் தலைமையகம், புதிய பஸ் நிலையம், ஆத்தூர், மேட்டூர், நாமக்கல் மாவட்டத்தில் பள்ளிபாளையம், ஆண்டகளூர் கேட், ராசிபுரம், திருச்செங்கோடு உள்ளிட்ட 9 இடங்களில் உள்ள ஆவின் பார்லர்களில் இனிப்பு வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டு உள்ளது.

இது குறித்து சேலம் ஆவின் நிறுவன அதிகாரி ஒருவர் கூறுகையில், ÔÔ250 கிராம் ஆவின் ஸ்வீட்டுகள் ரூ.65க்கும், 500 கிராம் பாக்ஸ் ரூ.130க்கும், அனைத்து வகை இனிப்புகளும் கலந்த 750 கிராம் பாக்கெட் ரூ.200க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இதுவரை 6 டன் இனிப்புகள் விற்பனை செய்யப்பட்டு உள்ளது,ÕÕ என்றார்.